# ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையின் அபாயங்கள்

ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையானது அபாயமான ஒரு உபதேசமாகும் என்று நான் கருதுவதை இப்பாடத்தின் தலைப்பானது திட்டவட்டமாகவே உணர்த்துகின்றது. நான் இப்படி நினைப்பதற்குக் காரணங்கள் உள்ளன. இந்த உபதேசத்தின் பல்வேறு கொள்கைகளில் சில உபதேசங்கள் சத்திய சுவிசேஷத்தைக் கவிழ்த்துப்போடுவனவாகவும், புதிய ஏற்பாட்டு உபதேசத்தின் வேர் ஆதாரத்தையே தாக்குபவைகளாகவும் இருப்பதை நான் காண்கின்றேன்.

மேலும், ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையின் கனிகள் சிலவற்றை அதன் வழிபாட்டாளர்களின் வாழ்வில் நான் கண்டிருக்கின்றேன். ஒரு காலத்தில் மாபெரும் சுவிசேஷ சத்தியத்திற்காகத் தாங்கள் போராடியதை மறந்து விடும் அளவுக்கு மனிதர்கள் இந்த உபதேசத்தில் மயங்கியவர்கள் ஆகின்றார்கள். அவர்கள் ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கையை பேசி பிரசங்கித்து, அதைப் பற்றி எழுதுவார்கள். அதன் மீது வெறி கொள்ளுமளவு அவர்கள் ஈடுபாடு கொள்கின்றார்கள். ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையானது அவர்களைப் பொறுத்தமட்டில் பிரசங்கிக்கப்பட வேண்டிய மிக முக்கியமான செய்தியாகின்றது. அதற்குப் புகலிடம் தர மறுக்கும் சபைகளை அவர்கள் தவிர்த்து, வேறு எந்த வகையிலும் உபதேச வேறுபாடு இருந்தாலும், இந்த போதனையை ஏற்றுக் கொள்கின்ற மற்றவர்களை அவர்கள் நாடுகின்றார்கள்.

## ஆயிரமாண்டு முன் அரசாட்சி உபதேசம்

எதிர்காலத்தில் இப்பூமியில் ஆயிரம் ஆண்டுக்காலம் அகில உலக அளவிலான நீதியுள்ள அரசாட்சி உண்டாகியிருக்கும் என்பதே ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையின் போதனையாகும். அந்தப் போதனையின்படி, கிறிஸ்து அந்தக் காலத்திற்கு முன் பூமிக்கு மறுபடியும்

வந்து அந்தக் கால முழுவதிலும் பூமியில் அரசாண்டு கொண்டிருக்க வேண்டியதாய் உள்ளது. மற்ற கருத்துக்களும் உட்பட்டிருக்கின்றன. ஆனால் இதுவே ஒரு சுருக்கமான மேல் கண்ணோட்டமாகும்.

வேதாகமமானது பல வழிமுறைகளில் இந்த உபதேசத்தை மறுக்கின்றது. அது தீர்க்கதரிசனத்தின்படியான இராஜ்யமானது ஏற்கனவே நிலைநாட்டப்பட்டுள்ளதைக் காண்பிக்கின்றது. அது, கிறிஸ்து இப்பொழுது தாவீதின் அரியணையிலிருந்து ஆளுகை செய்கின்றார் என்று காண்பிக்கின்றது. இந்தக் கருத்துக்கள், அக்கோட்பாட்டை மறுக்கின்றன, மற்றும் அவைகள் வேதவசனப் பகுதிகளினால் தெளிவாகப் போதிக்கப் படுகின்றன.

உருவகமான மற்றும் மறைபொருளான வசனப் பகுதிகள் தெளிவான வசனப் பகுதிகளின் வெளிச்சத்தில் விளக்கம் தரப்பட வேண்டும் என்பது வேதாகமப் படிப்பின் ஒரு விதியாகும் என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இருப்பினும், ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கையாளர்கள் முதலில் உருவக வசனப் பகுதிகளுக்கு விளக்கம் தந்து, பிறகு தெளிவான வசனப் பகுதிகளை அவ்விளக்கத்திற்கு இணங்கச் செய்ய முயற்சிக்கின்றார்கள் அல்லது தெளிவான வசனப் பகுதிகள் முழுவதையும் அவர்கள் புறக்கணித்து விடுகின்றார்கள்.

ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையாளர்கள் வேதாகமத்தைத் தாங்கள் பெரிதும் விசுவாசிப்பதாகப் பெருமையடித்துக் கொள்கின்றார்கள் மற்றும் அவர்கள், மற்றவர்களை அந்த அளவு விசுவாசமற்றவர்கள் என்று குற்றம் சாட்டுகின்றார்கள். உருவக நடையிலான கூற்று உருவகமேயாகும் என்று ஒருவர் நம்பும்போது அவர் வேதாகமத்தை விசுவாசிப்பதில்லை என்று அவர்கள் நினைப்பதாகக் காணப்படுகின்றது. முதலில் உருவக நடையிலான வசனப் பகுதிகளுக்கு விளக்கம் தந்துவிட்டுப் பிறகு தெளிவான வசனப் பகுதிகளை அதற்கு இணங்க வைக்க முயற்சி செய்வதென்பது எவ்வகையிலும் சத்தியத்தை அடைய வழி வகுக்காது. மாறாக இது, எந்த விலை கொடுத்தும் தவறான கோட்பாட்டைப் பராமரிக்கச் செய்கின்ற ஒரு முயற்சியே ஆகும்.

ஆயிரமாண்டு முன் அரசாட்சி உபதேசமானது அதை விசுவாசிப்பவர்கள் மற்ற எந்த உபதேசத்தைக் காட்டிலும் - இரட்சிப்பின் திட்டம், இரத்தத்தைக் கிரயம் கொடுத்துப் பெற்ற சபை போன்ற உபதேசங்களைக் காட்டிலும் - அந்த உபதேசத்தை அதிகமாய்ப் பற்றிக் கொள்வதை உறுதிப்படுத்துகின்றது. இந்தக் கோட்பாடானது இதன் ஆதரவாளர்கள் ''சபையின் யுகம்'' மற்றும் கர்த்தருடைய சபைக்குத் தொடர்பான உபதேசங்களை இரண்டாம் பட்சமாய்க் கருதுவதற்குக் காரணமாகின்றது. இது எப்படிச் செய்யப்படுகிறது என்பதை நாம் காண்போம்.

# ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையாளர்களின் செயல் முறைகளும் யுக்திகளும்

*ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையாளர்கள் இராஜ்யத்தைப் பற்றி முன்னுரைக்கும் பழைய ஏற்பாட்டு வேதவசனப் பகுதிகளை வாசிக்கின்றனர் மற்றும் யோவானும் இயேசுவும் இராஜ்யம் "சமீபமாயிற்று" என்று அறிவித்ததையும் அவர்கள் அறிந்துள்ளனர். இருப்பினும் இராஜ்யமானது நிலைநாட்டப்படவில்லை, ஆனால் தள்ளிப் போடப் பட்டுள்ளது என்ற முடிவுக்கு வருகின்றார்கள். அது இயேசுவால் தள்ளிப் போடப்பட்டது என்றோ அல்லது தள்ளிப் போடப்பட்டதைக் குறிப்பால் உணர்த்துகின்றதாகவோ ஏதேனும் வேதவசனப் பகுதி உள்ளதா? இல்லை. பிறகு எப்படி அவர்கள் இந்தக் கருத்தைப் பெற்றார்கள்? அவர்கள், இராஜ்யம் மற்றும் அரியணை பற்றிய பழைய ஏற்பாட்டு வேதவசனப் பகுதிகளை வாசித்து, பூமிக்குரிய, உலகாதாயமான ஆளுகையொன்று முன்னுரைக்கப்பட்டுள்ளதாக முடிவுக்கு வருகின்றனர். யோவான் மற்றும் இயேசுவால் அறிவிக்கப்பட்ட இராஜ்யத்திற்கும் கூட அவர்கள் அதே கருத்தையே நினைக்கின்றனர். இயேசு ஒருக்காலும் இவ்வகையான இராஜ்யத்தை நிலைநாட்டவில்லை என்பதை அவர்கள் காண்கிறார்கள், எனவே அவர் அதைத் தள்ளிப் போட்டார் என்று அவர்கள் முடிவு செய்கின்றனர்.*

*தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டதும், யோவான் மற்றும் இயேசுவினால் அறிவிக்கப்பட்டதுமான இராஜ்யத்தின் இயல்பு பற்றி ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்கள் தங்கள் சொந்தக் கருத்துக்கள் தவறானதாயிருக்கலாம் என்றுகூட எண்ணுவதாகக் காணப்படவில்லை. தானியேல் 2:44ல் இராஜ்யம் முன்னுரைக்கப்பட்டதென்றும், அது ரோம ராஜ்யத்தின் நாட்களில் நிலைநாட்டப் படும் என்று அதில் முன்னுரைக்கப்பட்டதென்றும் அவர்கள் கூறுகின்றனர். இராஜ்யத்தை நிலைநாட்டும் விருப்பத்துடன்தான் இயேசு வந்தார் என்றும் அவர்கள் ஒப்புக் கொள்ளுகின்றனர். இருப்பினும், யூதர்கள் அந்த இராஜ்யத்திற்கு ஆயத்தமாயிராததால் மற்றும் அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதால் இயேசு அதைத் தள்ளிப் போடுவது அவசியமாயிற்று என்று அவர்கள் உரிமை கோருகின்றனர்.*

*ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையாளர்களின் கருத்துப்படி, ரோமாபுரியானது புத்துயிர்ப்புப் பெற்று, மீண்டும் ஒருமுறை இந்தப் பூமியை ஆளுகை செய்யும். தானியேல் 2:44ன் நிறைவேற்றத்தை அளிப்பதற்காக அவர்கள் இக்கருத்தைப் பராமரிக்கின்றனர். இரண்டாம் உலக யுத்தத்தின் போது இத்தாலியானது மறுபடியும் முன்னேறலாம் என்று காணப்பட்ட பொழுது, ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையாளர்களின் எழுதுகோல்கள் தாராளமாய்ப் பெருக்கெடுத்து எழுதின; ஆனால் அதிகாரத்தின் அச்சு முறிக்கப்பட்ட பொழுது அந்த*

எழுதுகோல்கள் அமைதியாயின. இயேசுவின் காலத்தில் இருந்த யூதர்களைப் போலவே, ஒருங்கிணைந்த இராணுவங்களும் கூட தேவனுடைய திட்டத்தில் வெறுப்புக் கொண்டன என்பது உண்மையாய் இருக்க முடியுமா?

இவ்விஷயங்களில் தேவனுடைய தாமதத்தைத் தாங்கள் புரிந்து கொள்ளவில்லை என்று ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையாளர்கள் கூறுகின்றனர். கர்த்தருக்கு ஒரு திட்டத்தை அவர்கள் பண்புபடுத்தி, ஒரு நிகழ்ச்சியானது நடக்கத் தவறும் பொழுது கர்த்தர் தமது திட்டத்தை தள்ளி வைத்துவிட்டார் அல்லது மாற்றிக் கொண்டு விட்டார் என்று அவர்கள் முடிவு செய்வதாகக் காணப்படுகின்றது. இதற்குப் பதிலாக அவர்கள், தேவனுடைய திட்டத்தைப் பற்றிய தங்கள் கருத்து தவறானது என்ற முடிவை ஏன் அடைவதில்லை?

## ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையின் உட்கருத்துக்கள்

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனத்தின் இராஜ்யமானது நிலைநாட்டப்பட்டுள்ளது. எபி. 12:28; கொலோ. 1:13 மற்றும் வெளி. 1:9 போன்ற வசனப் பகுதிகளில் இது கேள்விக்கிடமின்றிச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவ்வசனப் பகுதிகள் இராஜ்யம் உள்ளது என்று வெறுமனே மறைமுகமாய்ச் சுட்டிக்காட்டுவதில்லை; அதை இவைகள் அறிவிக்கின்றன. எபி. 12:28ல், "... அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் ..." என்று கூறப்படுகின்றது. கொலோ. 1:13ல் பவுலின் கூற்றானது தேவன் நம்மை "தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவராய்" இருக்கின்றார் என்பதைத் தோற்றுவிக்கின்றது. வெளி. 1:9ல் யோவான் தாம் "ராஜ்யத்திற்கு உடன் பங்காளனாய் இருக்கிற" சகோதரன் என்று அறிவித்தார்.

தாவீதின் அரியணையில் வீற்றிருக்கச் செய்யும்படி கிறிஸ்துவை தேவன் எழுப்பினார் (அப். 2:30, 31); "தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி ... அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து," (எபே. 1:19, 21) என்று வாசிக்கின்றோம். கிறிஸ்து, "தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டு பண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்" (எபி. 1:3). தாவீதின் கூடாரமானது (அப். 15:14-17) ஆவிக்குரிய வகையில் மறுபடியும் கட்டப்பட்டுள்ளது; ஆகையால், புறஜாதியார் இப்பொழுது பரிசுத்தவான்களுடன் சக குடியுரிமையை மகிழ்வுடன் அனுபவிக்கலாம். மற்றும், வேதவசனங்களின் ஒரு ஒப்பீடானது கிறிஸ்துவின் சபையே இராஜ்யமாகும் என்று சுட்டிக்காட்டுகின்றது. அவருக்கு ஒரே சரீரம் இருப்பதாலும், அவர் தமது இராஜ்யத்தின் மீது ஆளுகை செய்து, தமது சபையின் தலையாய் இருப்பதாலும், இரண்டும் ஒரே சரீரமாய் இருக்க வேண்டும் என்ற கருத்து தொடருகின்றது (எபே. 4:4).

ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையாளர்கள் இராஜ்யம்

*நிலைநாட்டப்பட்டுள்ளது என்பதை நம்புவதில்லை, ஆனால் சபை நிலைநாட்டப்பட்டு விட்டதென்று அவர்கள் நம்புகின்றார்கள், எனவே இராஜ்யம்தான் சபை என்று அவர்கள் நம்புவதில்லை என்று அர்த்தமாகின்றது. பிறகு அவர்களைப் பொறுத்தமட்டில் தேவனுடைய திட்டத்தில் சபையின் பங்கு என்ன?*

*இராஜ்யத்தைத் தள்ளிப் போடுவதென்று முடிவெடுக்கப்பட்ட பொழுது, அதற்குப் பதிலாக சபை ஏற்படுத்தப்பட்டது என்று ஆயிரமாண்டு முன் அரசாட்சிப் போதனை/உபதேசம் கூறுகின்றது. இந்தக் கோட்பாட்டின்படி, இராஜ்யம் நிலை நாட்டப்பட முடியாதென்று இயேசு கண்ட பிறகு, சபையை நிலைநாட்டுவதில் தமது விருப்பத்தை அவர் அறிவித்தார் எனப்படுகின்றது. இந்தப் போதனையானது மிகச் சரியான தாயிருந்தால், இயேசு சபையைக் கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்த பிறகு, இராஜ்யம் அருகில் இருப்பதாக எந்த அறிவிப்பையும் கொடுத்திருப்பார் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. மாறாக, இவ்விஷயத்தையே நாம் காண்கின்றோம். இந்த ஒரு உண்மையே ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையை என்றென்றுமாக முற்றிலும் அழித்துப் போட்டு விடும். லூக்கா 10:9ல் "தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது" என்று பிரசங்கிக்கும்படி எழுபது சீஷர்களுக்குக் கூறப்பட்டது. இந்தக் கூற்றானது இயேசு தமது சபையைக் கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்த பிறகு (மத். 16:18) ஏற்படுத்தப்பட்டது. இதை நாம் எப்படி அறிகின்றோம்? லூக்கா 10ல் எழுபது பேருக்குத் தரப்பட்ட வரையறைக்குட்பட்ட கட்டளையானது லூக். 9ல் மறுரூபமான பிறகு தரப்பட்டதாகும். இருப்பினும், இயேசு தம் சபையைக் கட்டுவதாகக் கொடுத்த வாக்குத்தத்தமானது மத். 16ல் மறுரூபமாவதற்கு முன்னதாகக் காணப்படுகின்றது, மறுரூபமாகுதல் மத். 17லும் பதியப்பட்டுள்ளது. ஆகையால், லூக். 10ல் இராஜ்யம் சமீபித்திருப்பதாக இயேசு கூறியது அவர் மத். 16ல் தமது சபையைக் கட்டப் போவதாகக் கொடுத்த வாக்குத் தத்தத்திற்குப் பிறகு கூறப்பட்டதாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இயேசு தமது சபையைக் கட்டுவதாக வாக்குத்தத்தம் செய்த பிறகும் கூட இராஜ்யம் "சமீபித்து" இருந்ததாக அறிவித்தார்.*

*சபையைப் பற்றிய இயேசுவின் அறிவிப்பானது அவரது இராஜ்யத்தின் வாக்குத்தத்தங்களைக் கைவிடுதல் என்று அர்த்தப்படவில்லை. தேவன் சபையைத் தமது சிந்தையில் எப்பொழுதும் கொண்டிருந்தார் என்பதே சத்தியமாக உள்ளது. எபேசியர் 3ல் அதைப் பற்றியும் அதன் வடிவமைப்பைப் பற்றியும் பவுல் பேசுகையில், "தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின் படியே" (வ. 11) என்று கூறினார். அதே அதிகாரத்தில் பவுல் தம்முடைய அற்புதமான புகழுரைகள் ஒன்றில் "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக" (வ. 21) என்று கூறினார். "தலைமுறை தலைமுறைக்கும்" என்ற விளக்கத்தைக் கவனியுங்கள். ஆம், சபை என்பது தேவனுடைய நித்திய தீர்மானமாயிருந்தது, அதன் மூலமாகவே அவர் "தலைமுறை*

தலைமுறைக்கும்'' மகிமைப்பட வேண்டியதாயுள்ளது. சபை என்பது தேவன் தீர்மானித்திருந்ததின் நிறைவேற்றமாகவும், தீர்க்கதரிசிகள் முன்னுரைத்ததாகவும், கிறிஸ்து அறிவித்திருந்ததாகவும் இருக்கிறது என்று பவுல் போதித்தார்.

ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையென்பது உண்மையாயிருந்தால், சபையானது எவ்விதம் தேவனுடைய தீர்மானத்தில் உள்ளடங்கியிருக்க முடியும்? அப்படி இருந்திருக்க முடியாது. பழைய ஏற்பாட்டின் ஒரு தீர்க்கதரிசனமாவது அதற்குரியதாய் எப்படி இருக்க முடியும்? ஒன்றும் அப்படி இருக்க முடியாது. அந்த உபதேசத்தின்படி, இராஜ்யம் என்பதே ஆதி தீர்மானமும் திட்டமுமாய் இருந்தது, ஆனால் இராஜ்யமானது புறக்கணிக்கப்பட்ட பின் அதற்குப் பதில் சபை ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது.

கிறிஸ்தவ யுகம் என்பது ஒரு தற்செயலான யுகமாய் உள்ளதா? இது ஏமாற்றத்தில் ஏற்பட்ட ஒன்றா? இது இராஜ்யம் வரும் வரையிலும் பதிலீடாக நிரப்பப்படுவதாய் உள்ளதா? இராஜ்யத்தை எதிர்பார்த்து, அந்த இராஜ்யத்திற்கு ஆளும் வர்க்கம் ஒன்றைத் தயாரிப்பதில் இது ஈடுபட்டுள்ளதா? இல்லை.

ஆகையால், ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்கையாளர்களின் சிந்தனையில் சபை, இரட்சிப்பின் திட்டம், மற்றும் இந்த யுகத்திற்கான குறிப்பிடத் தக்க மற்ற விஷயங்கள் யாவும் எப்படி ஒரு சிறிய இடத்தைப் பெற வந்தன என்று புரிந்து கொள்ளுவது கடினமல்ல. இந்த உபதேசமானது தன்னிலேயே அவர்களுக்கு இந்த நிலையை ஒப்படைப்பதாய் உள்ளது. பெரிய, உச்சபட்ச நிகழ்ச்சியானது இனி வருவதாய் உள்ளது, மற்றும் அவர்கள் நிலையாக அதை எதிர்பார்த்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த உச்சபட்ச நிகழ்ச்சியில் அடங்கியுள்ளது என்ன? யூதத்துவத்தின் சடங்குகள் மற்றும் வடிவமைப்புகள் கொண்ட பூமிக்குரிய ஒரு இராஜ்யமானது புத்துயிர்ப்பிக்கப்படும்! இந்த உபதேசமானது கிறிஸ்தவத்தின் உண்மையான ஆவியை எவ்வளவாய்க் கவிழ்த்துப் போடுவதாக உள்ளது! இது நிழலுக்குத் திரும்பிப் போவதாக இருக்கிறது! இது மிகவும் அபாயமானதாக இருக்கின்றது.

## முடிவுரை

பூமியில் இன்றைய நாட்களிலும், இனி என்றென்றைக்கும் தேவன் கொண்டுள்ள ஒரே இராஜ்யம் சபையே ஆகும். இது அவரது நித்திய தீர்மானத்தின் ஒரு பாகம் ஆகும். புதிய ஏற்பாடானது இதற்கு மிக உயர்ந்த முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகின்றது. இது மாபெரியதாய் உள்ளது; இதனருகில் வைக்கப்படுகின்ற மற்ற எல்லா நிறுவனங்களும் உருக் குறைந்து விடுகின்றன. இயேசு இதன் மீது ஆளுகை செய்கின்றார். அவர் உன்னதங்களில் தாவீதின் அரியணையிலிருந்து அரசராக ஆளுகை செய்கின்றார். எல்லா சத்துருக்களும் அவருக்குப் பாதபடியாகும் வரைக்கும் அவர் ஆளுகை செய்ய வேண்டும். பரிகரிக்கப்பட வேண்டிய "கடைசிச்

*சத்துரு மரணம்" ஆகும் (1 கொரி. 15:25, 26). கடைசி நாளில் தீயோர் மற்றும் நீதிமான்கள் யாவரும் உயிர்ப்பிக்கப்படுவதினால் அது அழிக்கப்படும் (யோவா. 5:28, 29; 6:44; 12:48).*

*அப். 24:15ல் கூறப்பட்டுள்ளபடியான ஒரு ''உயிர்த்தெழுதல்'' இருக்கும். நீதிமான்களுக்கு ஒன்றும் அநீதிமான்களுக்கு ஒன்றுமாக ஆயிரமாண்டு இடைவெளியால் பிரிக்கப்பட்ட இரண்டு உயிர்த்தெழுதல்கள் இருக்காது. கடைசி நாளில் மரித்தோர் உயிர்த்தெழுப்பப்படும் போது கடைசிச் சத்துரு அழிக்கப்படுகின்றான், கிறிஸ்து, பிதாவாகிய தேவனிடத்தில் இராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார். இந்த இராஜ்யமே பாதாளத்தின் வாசல்களால் மேற்கொள்ள முடியாதபடி எதிர்த்து நிற்கின்றதாக - அசையாத இராஜ்யமாக - வும், என்றென்றைக்கும் நிலைத்திருக்கின்ற இராஜ்யமாகவும் உள்ளது.*

*ஆத்துமாவுக்கு ஒரு இல்லிடம் உண்டு என்று கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர், அந்த இல்லிடத்தை அவர்கள் எதிர் நோக்குகின்றார்கள். அது பூமிக்குரிய வாசஸ்தலத்திற்கான நம்பிக்கையல்ல, ஆனால் "அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய ... உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" (1 பேது. 1:4, 5).*